| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 582,995 | 2.9 |
| மன்னார் | 99,063 | 0.5 |
| வவுனியா | 172,730 | 0.9 |
| முல்லைத்தீவு | 92,228 | 0.5 |
| கிளிநொச்சி | 112,872 | 0.6 |
| **கிழக்கு மாகாணம்** | 1,547,377 | 7.6 |
| மட்டக்களப்பு | 525,186 | 2.6 |
| அம்பாறை | 645,825 | 3.2 |
| திருகோணமலை | 376,366 | 1.9 |

வட மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களின் இனவாரியான குடித்தொகை மதிப்பைக் கீழேயுள்ள அடடவணை 5 எடுத்துக் காட்டுகிறது.

**அட்டணை 5**
**வட மாகாண குடிப் பரம்பல் மற்றும் நிலப்பரப்பு (2011)**

| நிருவாக மாவட்டம் | மாவட்ட செயலகப் பிரிவுகள் | கிராம சேவகப் பிரிவுகள் | மொத்த நிலப் பரப்பு | | மக்கள் தொகை (2011 மதிப்பீடு) | | | | | | மக்கள் செறிவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ச.கிமீ | ச.மைல் | இலங்கைத் தமிழர் | முஸ்லிம் | சிங்களவர் | மலையகத் தமிழர் | மற்றவர்கள் | மொத்தம் | ச.கிமீ |
| யாழ்ப்பாணம் | 15 | 435 | 1,025 | 396 | 560,905 | 1,874 | 746 | 3,550 | 154 | **567,229** | 553 |
| கிளிநொச்சி | 4 | 95 | 1,279 | 494 | 101,585 | 774 | 138 | 1,194 | 26 | **103,717** | 81 |
| மன்னார் | 5 | 153 | 1,996 | 771 | 77,653 | 16,130 | 455 | 1,136 | 56 | **95,430** | 48 |
| முல்லைத்தீவு | 5 | 127 | 2,617 | 1010 | 59,540 | 2,390 | 3,966 | 596 | 34 | **66,526** | 25 |
| வவுனியா | 4 | 102 | 1,967 | 759 | 134,709 | 11,491 | 16,555 | 1,956 | 141 | **164,852** | 84 |
| **மொத்தம்** | **33** | **912** | **8,884** | **3,430** | **934,392** | **32,659** | **21,860** | **8,432** | **411** | **997,754** | **112** |
| விழுக்காடு | | | | | 93.65 | 3.27 | 2.20 | 0.85 | 0.03 | 100 | |

கிழக்கு மாகாணத்தில் உள்ள 3 மாவட்டங்களின் இனவாரியான குடித்தொகை புள்ளிவிபரத்தை கீழேயுள்ள அட்டவணை 7 எடுத்துக் காட்டுகிறது. திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்களது எண்ணிக்கை 95,652 ஆகவும் முஸ்லிம்களது எண்ணிக்கை 151,692 ஆகவும் இருப்பது கவனிக்கத்தக்கது. 1981 இல் தமிழர்களின் எண்ணிக்கை 93,510 (36.4 விழுக்காடு) ஆகவும் முஸ்லிம்கள் 74,403 (29.0 விழுக்காடு) ஆகவும் சிங்களவர்கள் 86,341 (33.6 விழுக்காடு) ஆகவும் காணப்பட்டனர். இந்த மாவட்டங்களில் ஏற்பட்ட மாற்றத்தை அறிந்து கொள்ள இந்தப் புள்ளி விபரம் துணையாக இருக்கும். தென் தமிழீழத்தில் தமிழர்களது எண்ணிக்கை கடுமையாக வீழ்ச்சி அடைந்ததற்கு சிங்களக் குடியேற்றமே முக்கிய காரணமாகும். அடுத்து புலப்பெயர்வும் காரணமாகும். தமிழ்நாடு ஏதிலி முகாம்களில் வாழும் 70,000 மக்களில் சரி பாதிக்கு மேல் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படுகிறது.

**அட்டவணை 6**
**கிழக்கு மாகாண குடிப் பரம்பல் மற்றும் நிலப்பரப்பு (2011)**